பட்டதாகத் தெரிகிறது. நிருபர்கள் வெளியிலே என்னைப் போன்றவர்களிடத்தில் அப்படித் தெரிவித்ததனால், அதைப்பற்றி கருத்துக்களை நாங்கள் தெரிவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆக நிச்சயமாக மேலவையை முடிப்போம் என்ற கருத்து அவை முன்னவர் பேச்சுமூலமாக வெளியே வந்திருக்கிறது. அப்படி தெரிவிக்கவில்லை என்றால், பத்திரிகை உலகத்திற்கு உடனடியாக அவை முன்னவர் விளக்கம் தந்தாகவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50)

இப்போதும் அப்படி ஏதாவது தவறான கருத்துக்களிலே பத்திரிகை நிருபர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் திருத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இந்த அவைக்கு வந்திருக்கிற நிருபர்களும், அந்த அவைக்கு செல்கிற நிருபர்களும் வேறு, வேறாக இருந்தாலும் அவர்கள் ஒரே பத்திரிகையைச் சார்ந்தவர்களாக இருப்பதன் காரணமாக, அவர்களை இங்கே இருப்பவர்கள் திருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

3. தகவல் கோரல்

(அ) தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் ஆண்டறிக்கை காலதாமதமாக அவைமுன் வைக்கப்பெற்றுள்ளது

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது ஒழுங்குப் பிரச்சனை. இந்த மாமன்றத்திலே அரசு சார்பாக இருக்கின்ற நிறுவனங்கள், ஆணையங்களுடைய ஆண்டு அறிக்கை. உரிய காலத்தில் இங்கே வைக்கப் படுவது இல்லை. பல ஆண்டுக்காலம் காலதாமதமாக வருகிறது என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னால் எழுப்பப்பட்டிருக்கிறது. அண்மையில் கூட இந்த நிகழ்ச்சியில் புதிதாக சேர்ந்த ஒன்று Annual Report of the Public Service Commission. இந்த தேர்வாணைக் குழுவினுடைய 1979–80 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே காலதாமதத்திற்கு காரணம் சொல்லப்பட்டிருக்கிறது, அது வேடிக்கையாக இருக்கிறது. அதாவது அரசு அச்சகத்திற்கு அனுப்பி அதன் மூலமாக பெறுவதற்கு காலதாமதம் ஆகியிருக்கிறது என்று முன்னால் ஒரு செய்தியும், பின்னால் இந்த ஆண்டு அறிக்கையில் 8 இனங்களுக்கான விளக்க குறிப்புகள் துறையிலிருந்து வராத காரணத்தால் தான் இந்த மாதிரி காலதாமதம் ஆகியிருக்கிறது என்று சொல்லி தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயரால் இங்கே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் உங்கள் மூலமாக தெரிந்து கொள்ள விரும்புவது, இந்த ஆண்டு அறிக்கையிலே Government of Tamil Nadu 1980 என்று போடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தைப் பார்த்தால் தெரியும் எவ்வளவு பழைய தாக, கிழிந்த புத்தகமாக இருக்கிறது என்று. எனவே தொடர்ந்து இந்தமாதிரி காலதாமதமாக வைப்பது பற்றி இந்த தேர்வாணைக்

குழுவின் அறிக்கையின் மீது விவாதத்தை நடத்த தாங்கள் அருள் கூர்ந்து ஏற்பாடு செய்வீர்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்திற்கு நோட்டீஸ் கொடுங்கள். விவாதிக்கலாம். Papers laid cn the Table of the House என்று ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். That Committee will be definitely look into it. அரசியல் சட்டத்திலே Article 323 (2) says that it shall be the duty of a State Commission to present annually to the Governor of the State a report as to the work done by the commission. இதை 2 வருடம் தாமதமாக கொடுத்து இருக்கிறார்கள். They have not followed the letter of the Constitution. (குறுக்கீடு) ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. இனிமேல் சரியாக கொடுக்கவேண்டும் என்று அவையின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

You will all be in the Committee and pull them up.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ல் பப்ளிஷ் ஆனதை 1986-ல் அவையில் வைத்தால் எப்படி? 1986-ல் வெளியிட வேண்டிய அவசியம் என்ன? முன்பே வெளி யிட்டு இருக்கலாமே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத் தான் நான் முதலி லேயே சொன்னேன். Papers laid on the table of the House. என்ற ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். அதிலே தெரிவித்து, அங்கே விவாதித்து அதைப் பற்றி இந்த அவைக்கு தெரிவிக்கலாம்.

(ஆ) தனி நபர் கார்த்திகேயன் ஊதியக் குழுவின் அறிக்கை குறித்து

திரு. கு. சுப்பாராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசிடமிருந்து ஒரு மிக முக்கியமான தகவலைத் தெரிந்து கொள்வதற்காக இந்தப் பிரச்சனையைக் கிளப்புகிறேன். மே மாதம் முதல் வாரத்தில் காத்திகேயன் கமிஷன் அறிக்கை வந்து விடும், வெளியிடப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. இன்று, இரண்டாவது வாரம் முடியப் போகிறது. அந்தக் கமிஷன் அறிக்கை வந்துவிட்டதா ? அது வந்ததற்குப் பிறகு அரசு ஊழி யர்கள், ஆசிரியர்களைக் கலந்து பேசி, அவர்களோடு ஒரு பேச்சு வார்த்தை நடத்தியதற்குப் பிறகு அந்த அறிக்கையை வெளியிட அரசு முன்வருமா ? அறிக்கை எப்போது வெளியிடப்படும் என் பதை அறிவிக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அவகாசம் கேட்ட வகையில், மே மாதம் 15ஆம் தேதி வாக்கில் தான் அவர்கள்